# 1 கண்டி இராச்சியம்

இவ் அத்தியாயத்தின் மூலம் பின்வரும் முக்கிய விடயங்களை அறிந்து கொள்ளலாம்.

- ❖ கண்டி இராச்சியத்தின் பூகோள அமைப்பு
- ❖ கண்டி இராச்சியத்தின் தோற்றமும் அதனை ஆட்சி செய்த மன்னர்களும்
- ❖ அம்மன்னர்களது அரசியல், பொருளாதார, சமூகப் பண்பாட்டுப் பணிகள்
- ❖ கண்டி இராச்சியத்திற்கும் மேலைத் தேசத்திற்குமிடையிலான தொடர்பும் கண்டி இராச்சியத்தின் அரசியல் பொருளாதார நிலைமையும்



## பூகோள அமைப்பு


கண்டி இராச்சியம் அமையப்பெற்ற மத்திய மலைநாடானது மலைகளாலும், ஆறுகளாலும், காடுகளாலும், நீர்நிலைகளாலும் சூழப்பட்ட இயற்கையான பாதுகாப்பு அரண்கள் நிறைந்த பிரதேசமாகும். மத்திய மலைகளைச் சூழவுள்ள பரந்த சமவெளிகளில் வெப்பம் அதிகமாகக் காணப்பட்ட போதிலும் மத்திய மலைநாடு சிறப்பான காலநிலையைக் கொண்டதாக விளங்கியது. மத்திய மலை நாட்டின் பூகோள அமைப்பானது மூன்று நூற்றாண்டுகளாக மேல் நாட்டவரது ஆக்கிரமிப்பிலிருந்து கண்டி இராச்சியத்தைப் பாதுகாக்க உதவியது

இலங்கையின் சுதந்திரத்தைப் பாதுகாத்த இறுதி அரசான இது, அநுராதபுர இராசதானிக்கு அடுத்ததாக நீண்டகாலம் நிலைத்திருந்த இராசதானியாக இருந்த பெருமையைப் பெறுகிறது. கண்டி இராச்சியம் ஆரம்ப காலத்தில் ஐந்து பிரதேசங்களை உள்ளடக்கி இருந்தது.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிதுருவான | - | உடுநுவர, உட பலாத்த |
| 2. | பலவிட்ட | - | ஹரிஸ்பத்துவ |
| 3. | மாத்தளை | - | மாத்தளை |
| 4. | தும்பறை | - | தும்பறை |
| 5. | சகமதுன்ரட்ட | - | வலப்பன, ஹேவாஹெட்ட |

கண்டி இராச்சியம் பல பெயர்களில் அழைக்கப்பட்டது அவையாவன :

1. பஞ்ச மலைநாடு
2. செங்கடகல இராச்சியம் (செங்கடகலபுரய)
3. மலைநாடு
4. கண்டி (மஹநுவர)
5. ஸ்ரீவர்த்தனபுர



கண்டி இராச்சியம் 1658 - 1815
யாழ்ப்பாணம்
கண்டி இராச்சிய எல்லை - 1658
கண்டி இராச்சிய எல்லை - 1670
பின் எல்லை - 1776
நுவரகலாவிய
தமன்கடுவ
தம்புள்ள
ஏழு கோறளை
குருநாகல்
மாத்தளை
தும்பறை
நில்லம்பே
யடிநுவர
ஹங்குரான்கெத்த
உடுநுவர
ஹேவாஹெட்ட
வலப்பனை
உடபலாத
வெல்லச
அக்கரைப்பற்று
பதுளை
ஊவா
கொழும்பு
சப்பிரகமுவ
0 10 20 30
மைல்
மாத்தறை
காலி

## கண்டி இராச்சியத்தின் தோற்றம்

கண்டி இராச்சியம் பதினைந்தாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் ஆரம்பமானது. ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் கோட்டை இராச்சியத்தின் கீழ் இருந்த கண்டி இராச்சியத்தைத் தனி அரசாக்கும் பொருட்டு இளவரசன் ஜோதிய கிளர்ச்சி செய்தான். அந்தக் கிளர்ச்சி தோல்வியடைந்த போதிலும் கி.பி 1469 இல் சேனா சம்மத விக்கிரமபாகு என்பவன் கோட்டை இராச்சியத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்து கண்டி இராச்சியத்தைத் தோற்றுவிப்பதில் வெற்றி கண்டான். அந்த இராச்சியத்தின் தலைநகராக விளங்கியது செங்கடகல நகராகும்.

**ஜோதிய இளவரசன்**

கோட்டை இராச்சிய மன்னன் 6ஆம் பராக்கிரமபாகுவினால் கண்டியின் பிரதேச ஆட்சியாளனாக நியமிக்கப் பட்டவன். இவனால் அரசனுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கலகத்தை அம்புலுகல இளவரசன் அடக்கினான்.

சேனாசம்மத விக்ரமபாகு கண்டி இராச்சியத்தை அமைக்கும் போது கம்பளை, சிதுறுவான, தெநுவர, பலவிட, மாத்தளை, பன்சிய பத்துவ, ஊவா ஆகிய பிரதேசங்கள் இந்த இராச்சியத்திற்கு உட்பட்டிருந்தது.

கண்டி இராச்சியத்தின் தோற்றம் கோட்டை இராச்சியத்துக்குப் பெரும் சவாலாக அமைந்தது. கண்டி இராச்சியத்தை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வேண்டும் என்பதே கோட்டை இராச்சியத்தின் குறிக்கோளாயிருந்தது. இதனால் கி.பி 1470 தொடக்கம் 125 ஆண்டுகள் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டுக் கண்டி இராச்சியம் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது.

கி.பி 1540ஆம் ஆண்டு கோட்டை, சீதாவாக்கை ஆகிய இராச்சியங்கள் இரண்டும் ஒன்றிணைந்து கண்டி இராச்சியத்துக்கு அச்சுறுத்தலாக விளங்கின. இவ்வேளைகளில் போர்த்துக்கேயரின் உதவியை நாடுதல் அல்லது கோட்டை ஆட்சியாளர்களுடன் நல்லுறவை ஏற்படுத்துதல் என்பதைக் கண்டி அரசர்கள் தம் குறிக்கோளாகக் கொண்டனர். இதன்பொருட்டு அடிக்கடி விவாகத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டன. எனினும் கோட்டை, சீதாவாக்கை இராச்சியங்கள் தம் அரசுகளை விரிவுப்படுத்தியமையும் பலப்படுத்தியமையும் கண்டி இராச்சியத்திற்குச் சவாலாக அமைந்தன.

கி.பி 1574 இல் சீதாவாக்கை இராஜசிங்கனின் படைகள் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்து பலனக் கணவாயைக் கைப்பற்றியது. கண்டி அரசனின் உதவிக்குப் போர்த்துக்கேயப்படை வந்தபோது, கண்டிப்படையால் சீதாவாக்கை படையினர் விரட்டியடிக்கப்பட்டிருந்தனர். கி.பி 1582 இல் மீண்டும் சீதாவாக்கைப் படை கண்டி இராச்சியத்தின் மீது தாக்குதலை மேற்கொண்ட போது கரலியத்த பண்டாரன் (கி.பி 1552 - 1582) தன் குடும்பத்துடன் மன்னாருக்குத் தப்பியோடி, போர்த்துக்கேயரிடம் தஞ்சமடைந்தான். சீதாவாக்கை மன்னன் இராஜசிங்கன் கண்டியைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, அதன் பிரதிநிதியாக (சாமந்த) வீரசுந்தர பண்டாரவை நியமித்தான். சில நாட்களில் இவன்மீது சந்தேகப்பட்ட மன்னன் தந்திரமாக அவனைக் கொலை செய்தான். பின்னர் சீதாவாக்கை அரச மரபைச் சேர்ந்த பிரதிநிதியாக நிக்கப்பிட்டிய பண்டாரவைப் பிரதிநிதியாக நியமித்தான்.

**சாமந்த :**
கோட்டை இராச்சியத்திலிருந்து முழுமையான சுயாட்சி பெறுவதற்கு முன் அதன் ஆட்சியாளன் சாமந்த எனப்பட்டான் அதாவது சாமந்த என்பது பிரதேச ஆட்சியாளன் என்பது பொருளாகும்.

குசுமாசனதேவி டொனா கதரீனா எனும் பெயரிலும், யமசிங்க பண்டார தொன்பிலிப் எனும் பெயரிலும், கோணப்பு பண்டார ஒஸ்திரிய தொன் ஜுவான் எனும் பெயரிலும் திருமுழுக்குப் பெற்றனர்.

சீதாவாக்கை இராஜசிங்கன் தனது இறுதிக்காலத்தில் சைவசமயத்தைத் தழுவிக் கொண்டான். அதன்பின்னர் அவன் பௌத்த விகாரைகளையும், பௌத்த நூல்களையும் அழித்தான். இதனால் கண்டி இராச்சிய மக்களினது வெறுப்புக்கு ஆளானான். இராஜசிங்கனின் அச்சுறுத்தலுக்குப் பயந்து போர்த்துக்கேயரிடம் தஞ்சம்புகுந்த கண்டி இராச்சியத்திற்கு உரிமையுடையவளும், கரலியத்த பண்டாரனின் மகளுமான குசுமாசன தேவி கத்தோலிக்க சமயத்தைத் தழுவினாள். அவ்வாறே யமசிங்க பண்டாரன், வீரசுந்தர பண்டாரனின் மகன் கோணப்பு பண்டாரன் ஆகியோர் கத்தோலிக்க சமயத்தைத் தழுவிப் போர்த்துக்கேயரின் தயவில் வாழ்ந்தனர். இவ்வேளையில் தொன் ஜுவான் தலைமையில் கண்டி இராச்சியத்திற்குப் படையொன்று அனுப்பப்பட்டது. மிக எளிதாகக் கண்டியைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் தொன் பிலிப்பை அரசனாக்கினர். கண்டி இராச்சியத்தில் போர்த்துக்கேயரின் தலையீட்டின் அடையாளமாக இது அமைந்தது.

## மன்னன் I ஆம் விமலதர்மசூரிய (கி.பி 1592 ~ 1604)

தமது சுதந்திரத்தை உயர்வாகக் கருதிய கண்டிச் சிங்களவர், போர்த்துக்கேயரின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. கண்டி இராச்சியத்துக்கேற்பட்ட இந்நிலைமையிலிருந்து அதனை மீட்பதற்கு கோணப்பு பண்டார தலைமை தாங்கினான். யமசிங்க பண்டார அரச கட்டிலேறி சில மாதங்களில் மரணமடைந்தான். தொன் ஜுவான் (கோணப்பு பண்டார) போர்த்துக்கேயருக்கு எதிராகக் கிளர்ச்சிசெய்து கி.பி. 1592ல் முதலாம் விமலதர்மசூரியன் (கி.பி. 1592 - 1604) என்ற பெயரில் அரசனானான். கி.பி. 1592 இல் சீதாவாக்கை இராஜசிங்கன் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்தபோதிலும் சிறந்த வீரனான விமலதர்மசூரியன் அதனை முறியடித்தான். இராஜசிங்கன் திரும்பி வருகையில் பெத்தங்கொடையில் மூங்கில் சிராய் குத்தியதால் கி.பி. 1593 இல் இறந்தான்.

சீதாவாக்கை இராஜசிங்கனின் மரணத்தின் பின்னர் கண்டி இராச்சியத்திற்குப் போர்த்துக்கேயரால் அச்சுறுத்தல் ஏற்பட்டது. கி.பி. 1592 இல் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றும் பொருட்டு போர்த்துக்கேயரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி முற்றிலும் தோல்வியுற்றதால் கோபமுற்ற போர்த்துக்கேயர் கி.பி 1594 இல் **பேரோ லோபேஸ் டிசூசாவின்** கீழ் பெரும் படையொன்றைக் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றும் பொருட்டு அனுப்பினர். தமது கட்டுப்பாட்டிலிருந்த கண்டி இராச்சியத்தின் ஆட்சிக்கு உரித்தாளியான குசுமாசன தேவியை சிம்மாசனமேற்றி விமலதர்ம சூரிய மன்னனின் ஆட்சியைக் கவிழ்ப்பதே போர்த்துக்கேயரின் நோக்கமாக இருந்தமையால் இப்படையுடன் குசுமாசன தேவியும் அனுப்பப்பட்டார்.

அந்தப் படை செங்கடகலையை அண்மித்ததும், மன்னன் விமலதர்மசூரியன் கடுகண்ணாவைக்கு அருகிலுள்ள தந்துரே எனும் இடத்தில் அதனை முறியடித்தான். இது **தந்துரே போர்** எனப்பட்டது. படைத்தளபதி சூசாவும் மரணமானான். குசுமாசனதேவியை போர்த்துக்கேயரிடமிருந்து விடுவித்த விமலதர்மசூரியன், அவளைத் தன் மனைவியாக்கினான். விமலதர்மசூரியன் அரச மரபிலிருந்து, வராவிட்டாலும் சிம்மாசன உரிமையுடைய குசுமாசன தேவியைத் தன் மனைவியாக்கிக் கொண்டதால் தன் ஆட்சியுரிமையை மேலும் உறுதி செய்து கொண்டான். கண்டி இராசதானியில் புதிய அரச பரம்பரை உருவானது.

> லஸ்கரின் படையினர் என்பது போர்த்துக்கேயரின் கீழ் பணியாற்றிய உள்நாட்டுப் படைவீரர்கள்.

தந்துரேப் போரில் தோல்வியுற்ற பின் தம்மை நன்கு பலப்படுத்திக் கொண்ட போர்த்துக்கேயர் 1602 இல் தொன் ஜெரனிமோ டி அசவேதுவின் கீழ் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்தனர். அந்த ஆக்கிரமிப்பின் போது பலன வரையிலும் அவர்கள் முன்னேறிச் சென்றனர். எனினும் அவர்களோடு இருந்த லஸ்கரின் படையினர்

மன்னன் விமலதர்மசூரியனின் படையுடன் சேர்ந்தனர். இதனால் ஆக்கிரமிப்புச் செய்த போர்த்துக்கேயப்படையைத் தோற்கடித்த விமலதர்மசூரியன் கண்டி இராச்சியத்தைக் காப்பாற்றிக் கொண்டான். இது **பலன போர்** எனப்பட்டது.

முதலாம் விமலதர்மசூரியன் அரசனாகும் போது ஐந்து பிரிவிற்கு மாத்திரம் உட்பட்டிருந்த கண்டி இராச்சியத்துடன் ஏழு கோறளை, நான்கு கோறளை, மூன்று கோறளை, சப்ரகமுவா போன்ற சீதாவாக்கை இராசதானிகளுக்குரிய பிரதேசங்களையும் இணைத்து இராச்சியத்தைப் பரவலாக்கினான்.

## முதலாம் விமலதர்மசூரிய மன்னனின் சமயப் பணிகள்

- முதலாம் விமலதர்மசூரியன் அரசனானதும் கண்டி இராச்சியத்தில் சிங்கள மொழியும், பௌத்த மதமும் எழுச்சி பெற்றது. கீழ்நாட்டுச் சிங்கள, பௌத்தர்களின் ஆதரவு கண்டி இராச்சியத்திற்குக் கிடைத்தமையால், அந்த இராச்சியம் பௌத்த மக்களின் மத்திய நிலையமாகக் கருதப்பட்டது.
- இரத்தினபுரிக்கு அருகிலுள்ள தெல்கமுவ விகாரையில் வைக்கப்பட்டிருந்த தந்ததாது (பற்சின்னம்) செங்கடகலைக்கு கொண்டு வரப்பட்டது. அங்கு அமைக்கப்பட்டிருந்த தலதா மாளிகையில் அது வைக்கப்பட்டதுடன் ஆண்டு தோறும் தலதா ஊர்வலம் (பெரஹர) செல்வதும் ஆரம்பமானது.
- பர்மாவிலிருந்து (மியன்மார்) புத்த பிக்குகளை வரவழைத்து திரும்பவும் உபசம்பதா சடங்கை செய்வித்தான்.
- லங்காதிலக, தெகல்தொருவ, ரிதிவிகாரை, கடலாதெனிய விகாரை போன்ற பலவிகாரைகளை புனர்நிர்மாணம் செய்தான்.

## முதலாம் விமலதர்ம சூரிய மன்னனின் பொருளாதாரப் பணிகள்

முதலாம் விமலதர்மசூரியனின் காலத்தில் கண்டி இராச்சியத்தின் பொருளாதார அபிவிருத்தியின் பல செயற்றிட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன. ஊவாப் பிரதேசத்தில் இரும்புத் தொழிலும், கொத்மலை, வலப்பன, ஹரிஸ்பத்து, ஹேவாஹெட்ட, உடுநுவர, யட்டிநுவர, உடதும்பர எனும் பிரதேசங்களில் விவசாயத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

**செயற்பாடு**

1 ஆம் விமலதர்மசூரிய மன்னன் செய்த சேவைகள் ஐந்தைத் தருக.

## மன்னன் செனரத் (கி.பி 1604 – 1635)

முதலாம் விமலதர்மசூரியனின் மரணத்தின் பின்னர் அவனது சகோதரனான செனரத் அரசனானான். அவன் வலிமை வாய்ந்தவனாக இருக்கவில்லை. போர்த்துக்கேயருடன் சமாதானமாக இருக்கும் பொருட்டு கி.பி 1617ல் அவர்களோடு உடன்படிக்கை செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தான். இந்த உடன்படிக்கையில் மன்னன் செனரத்தின் நோக்கம் நிறைவேறவில்லை.

போர்த்துக்கேய கப்பித்தான் ஜெனரலான கொன்ஸ்தாந்தைன் டீ சா கி.பி 1630இல் பெரும் படையுடன் ஊவாப் பிரதேசத்தை ஆக்கிரமித்தான். போர் வீரனான செனரத் மன்னனின் மகன் இராஜசிங்கனால் வழிநடத்திச் செல்லப்பட்ட போர்ப் படை பதுளைக்கு வந்தது. போர்த்துக்கேயருடன் வந்த சிங்களப் படைவீரர் அரசனோடு இணைந்ததால் போர்த்துக்கேயப்படை விரைவில் பின்வாங்கியது. **ரந்தெனிவெலையில்** போர்த்துக்கேயப்படைவீரர்கள் கொல்லப்பட்டனர். கப்பித்தான் ஜெனரல் கொன்ஸ்தாந்தைன் டீ சாவும் கொல்லப்பட்டான். இது ரந்தெனிவெல போர் எனப்பட்டது. இதனால் கண்டி இராச்சியத்தின் புகழ் ஓங்கியது.

## மன்னன் இரண்டாம் இராஜசிங்கன் (கி.பி 1635 ~ 1687)

செனரத் தம் மூன்று பிள்ளைகளுக்கும் கண்டி இராச்சியத்தின் ஆட்சியைப் பகிர்ந்தளித்தான்.

- ❋ கண்டி - இளவரசன் மகா அஸ்தான (இராஜசிங்கன்)
- ❋ மாத்தளை - இளவரசன் விஜயபால
- ❋ ஊவா - இளவரசன் குமாரசிங்கன்

தந்தையின் மரணத்தின் பின்னர் இளவரசன் இராஜசிங்கன் 2ம் இராஜசிங்கன் என்ற பெயருடன் அரசனானான். (கி.பி 1635 - 1687) போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து அகற்றுவதே அவனது ஒரே நோக்கமாக இருந்தது. கி.பி1630இல் அவன் ஒல்லாந்தருடன் தொடர்பு கொண்டதும் இந்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகவேயாகும்.

ஒல்லாந்தருடனான இராஜசிங்கனின் தொடர்பை அறிந்த கப்பிதான் ஜெனரல் தியோகு த மெலோ, கஸ்ரோவின் தலைமையில் கி.பி 1638 இல் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமிக்கப் பெரும் படையை அனுப்பினான். போர்த்துக்கேயர் சிங்களப் படையைக் கண்டிக்கு அருகிலுள்ள கன்னொறுவ என்ற இடத்தில் சந்தித்தனர். இது **கன்னொறுவ** போர் எனப்பட்டது. இப்போரில் போர்த்துக்கேயப் படை கண்டி இராச்சியப் படையால் தோற்கடிக்கப்பட்டதுடன் போர்த்துக்கேயரால் மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தலும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து அகற்றுவதற்கு 2 ஆம் இராஜசிங்கன் பல நடவடிக்கைகளை மேற்கொண்டான். மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற துறைமுகங்களைக் கைப்பற்றியமை அவைகளில் முக்கியமானதாகும்.

1. கி.பி 1630 ஆம் ஆண்டு தந்தைக்கு பதிலாக நடத்திச்சென்று ரத்தெனிவெலப் போரில் போர்த்துக்கேயப் படையை முறியடித்தல்.
2. கி.பி 1638 ஆம் ஆண்டு போர்த்துக்கேயருக்கு எதிராக உதவி பெறும் பொருட்டு ஒல்லாந்தருடன் உடன்படிக்கை செய்து கொள்ளல்.
3. கி.பி 1638 ஆம் ஆண்டு கண்னொறுவாப் போரில் போர்த்துக்கேய படையை முறியடித்தல்.

4. கி.பி 1658 இல் போர்த்துக்கேயரை முற்றாக அகற்றும் வரையில் ஒல்லாந்தருடன் இணைந்து கரையோரப்பகுதிகளில் போர் செய்தல்.
5. அப் போர்களில் போர்த்துக்கேயரின் கீழிருந்த பெரும் பகுதியைக் கண்டி இராச்சியத்துடன் இணைத்துக்கொள்ளல்.
6. கி.பி 1658 இன் பின்னர் ஒல்லாந்தருடன் பகைமையோடு செயற்பட்டான்.

போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து விரட்டும் நோக்குடன் ஒல்லாந்தருடன் தொடர்பு கொண்ட இரண்டாம் இராஜசிங்கனால் போர்த்துக்கேயரின் கீழிருந்த பிரதேசங்களில் பெரும் பகுதியைப் படிப்படியாகக் கைப்பற்றிக் கொள்ளக்கூடியதாக இருந்தது. கி.பி 1658ஆம் ஆண்டளவில் கண்டி இராச்சியம் முன் எப்போதும் இல்லாதவாறு பெரும் பகுதியை உள்ளடக்கியதாக இருந்ததோடு, போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து அகற்ற வேண்டுமெனும் அரசனின் நோக்கமும் நிறைவேறியிருந்தது.


2ஆம் இராஜசிங்கன்

**செயற்பாடு**
இரண்டாம் இராஜசிங்க மன்னன் இறந்த போது கண்டி இராச்சியத்திற்கு உரித்தாக இருந்த பிரதேசங்களை உள்ளடக்கிய இலங்கையின் புறஉருவப்படம் ஒன்றைத் தயாரிக்குக.

இரண்டாம் இராஜசிங்க மன்னனின் அதிகாரம் பரவலடைந்த விதத்தை சிறப்பித்துக் கூறும் கீழ்வரும் சிங்கள நாட்டார் பாடலை அறிந்துக்கொள்வோம்.

*பூ பூவாம் செவ்விள நீர் தென்னம் பூவாய்*
*அலை அலையாம் கடலில் எழும் நீரலையாம்*
*பலம் பலமாம் இராசிங்க தெய்வத்தின் அதிபலமாம்*
*கல் மேல் கோட்டை கட்டினானாம் திருகோணமலையில்.*

## மன்னன இரண்டாம் விமலதர்மசூரியன் (கி.பி 1687 ~ 1707)

இரண்டாம் இராஜசிங்கனின் மரணத்தின் பின்னர் அவனது மகன் இரண்டாம் விமலதர்மசூரியன் அரசனானான். இவன் பௌத்த பிக்குவாக நீண்ட காலமிருந்து பின் துறவு வாழ்க்கையில் இருந்து விடுபட்டு ஆட்சிக்கு வந்தமையால் இவன் இயற்கையாகவே சமாதானப் பிரியனாக இருந்தான்.

இவன் பர்மாவிலிருந்து (மியன்மார்) முப்பத்தி மூன்று பௌத்த பிக்குகளை வரவழைத்து இங்கு உபசம்பதா சடங்கை நடத்தி புத்த சாசனம் நிலைபெற வழிவகுத்தான்.

மன்னன் இரண்டாம் விமலதர்மசூரியனின் ஆட்சிக் காலத்தில் ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றப் பலமுறை முயன்றும் அது கைகூடவில்லை.

எனினும் கண்டி இராச்சியத்துடன் வர்த்தகத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள ஒல்லாந்தரால் முடிந்தது. கி.பி 1707 ஜூன் மாதம் 4ந் திகதி இரண்டாம் விமலதர்மசூரியன் இறந்தான். அதன் பின்னர் அவனது மகனான ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கன் அரசனானான்.

## மன்னன் வீர பராக்கிரம நரேந்திரசிங்கன் (கி.பி 1707 ~ 1739)

நரேந்திர சிங்க மன்னன் தென்னிந்திய நாயக்கர் வம்ச இளவரசியை மணந்து அவளைப் பட்டத்து இராணியாக்கினான். அதன் பின்னர் அரசியின் உறவினர்களான நாயக்க இனத்தவர்கள் இங்கு வந்து குடியேறினர். இதனால் இவனுடன் சிங்கள அரச பரம்பரை முடிவுற்றது. நாயக்கர் வம்சத்தினர் கண்டி இராச்சியத்தின் ஆட்சியைப் பெறக்கூடியதாக இருந்தது.

கி.பி 1739ஆம் ஆண்டு நரேந்திரசிங்க மன்னனின் மரணத்தின் பின் ஆட்சியைப் பொறுப்பேற்க மன்னனுக்கு வாரிசு இருக்கவில்லை. நாயக்க மரபுப்படி மன்னனுக்கு வாரிசு இல்லாவிடின் மனைவியின் சகோதரனுக்கு அரச உரிமை வழங்குவது வழக்கமாகும். இதன்படி ஸ்ரீ விஜய இராஜசிங்க கி.பி 1739இல் கண்டி இராச்சியத்தின் அரசனானான்.

## நாயக்கர் வம்ச ஆட்சி

கண்டி இராச்சியத்தில் சிங்கள அரச பரம்பரையின் ஆட்சி வீரபராக்கிரம நரேந்திர சிங்கனுடன் முடிவுற்றது. நாயக்கர் பரம்பரையினரின் ஆட்சி ஸ்ரீ விஜய ராஜசிங்கனுடன் ஆரம்பமானது.

**நாயக்கர் வம்சம்**

| | | |
|---|---|---|
| ❋ | ஸ்ரீ விஜய இராஜசிங்கன் | கி.பி 1739 - 1747 |
| ❋ | கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் | கி.பி 1747 - 1782 |
| ❋ | இராஜாதி இராஜசிங்கன் | கி.பி 1782 - 1798 |
| ❋ | ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் | கி.பி 1798 - 1815 |

நாயக்க மன்னர்கள் சைவசமயத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பௌத்த, சிங்கள மக்களின் நன்மதிப்பைப் பெறும் பொருட்டு, சிங்கள மொழியைக் கற்றதோடு, பௌத்த சமயத்தையும் தழுவினர். விகாரைகள் அமைத்ததோடு, புத்தமதத்தின் வளர்ச்சியின் பொருட்டு பல்வேறு பணிகளையும் ஆற்றினர்.

## மன்னன் ஸ்ரீ விஜய இராஜசிங்கன் (கி.பி 1739 ~ 1747)

இவன் கண்டி இராச்சியத்தின் அரசனானதும், அரச சபையின் கொள்கையில் சில மாற்றங்களை ஏற்படுத்தினான். தனது ஆட்சியை உறுதி செய்து கொள்ள வேண்டுமாயின் பிக்குகளினதும், பிரதானிகளினதும் நல்லெண்ணத்தைப் பெற

வேண்டும் என்பதை அவன் உணர்ந்து கொண்டான். அரசனுக்கு சார்பானவர்களுக்கு முக்கிய பதவிகள் வழங்கினான். பிலிமத்தலாவை அரசனுக்கு சார்பாக இருக்கவில்லை. எனவே அவனது மகா அதிகாரம் பதவியை அரசனுக்கு சார்பாக இருந்த சமரக்கொடி என்பவனுக்கு வழங்கினான். லெவ்கே திசாவைக்கு நான்கு கோறளை திசாவை பதவியும், வெலிவிட்ட சாமணேரவுக்கு, ராஜகுரு பதவியையும் வழங்கினான். கி.பி 1740ல் வெலிவிட்ட பிக்குவின் வேண்டுகோளின் படி உபசம்பதா சடங்கை நடாத்தும் பொருட்டுப் பௌத்த பிக்குகளை அழைத்து வர சீயம் (தாய்லாந்து) நாட்டிற்குத் தூதுக்குழுவை அனுப்பினான்.

ஸ்ரீ விஜய ராஜசிங்கன் நாயக்க வம்ச இளவரசியை மணந்து, அவளைத் தன் பட்டத்து இராணியாக்கினான். கி.பி 1747ல் ஸ்ரீ விஜய இராஜசிங்கன் மரணிக்கும் போது அவனுக்கு பிள்ளைகள் இருக்கவில்லை.

## மன்னன் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் (கி.பி 1747 ~ 1782)

ஸ்ரீ விஜய இராஜசிங்கனின் மரணத்தின் பின், நாயக்கர் மரபுப்படி அவனது மனைவியின் சகோதரன் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் அரசனானான். அப்போது அவனுக்குப் பதினாறு வயது. எனவே அவன் முடிசூடி ஆட்சியைப் பொறுப்பேற்றது 1750ஆம் ஆண்டிலாகும். அதுவரையிலும் அவனது தகப்பனான நரனப்பா நாயக்கர் என்பவனே அரசியல் விடயங்களைக் கவனித்தான். நாயக்கர்களது செயல்களை விரும்பாத கண்டிச் சிங்களப் பிரதானிகள் அரசனுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தனர். மன்னன் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் காலம் மன்னனுக்கும், பிரதானிகளுக்கும் இடையில் குழப்பம் நிறைந்த காலப்பகுதியாகவே இருந்தது. இக்காலத்தில் பிரதானிகளின் தலைவராக இருந்தவர் **எகலப்பொல அதிகாரமாகும்.** சமரக்கொடி அதிகாரமே அவனது முக்கிய எதிரியாவான். பொதுவாகக் கூறின் அரச சபையில் இருந்த சிங்களப் பிரதானிகளில் பலர் நாயக்கர்களின் பலத்த விரோதிகளாகவே இருந்தனர். அவர்களிடையே நிலவிய பகைமை அரசனின் ஆதிக்கத்தை உறுதி செய்ய உதவியாக இருந்தது. எனவே மக்களின் நன்மதிப்புக்குப் பாத்திரமான பௌத்த பிக்குகளுக்கு நிலபுலன்களை வழங்கி அவர்களின் ஆதரவைப் பெற்றுத் தன் நிலையை உறுதிப்படுத்திக் கொள்ள அவன் எண்ணினான். பௌத்த பிக்குகளினதும், மக்களினதும் துணையுடன் பிரதானிகளின் அதிகாரத்தைத் தகர்த்து விட அரசன் முயன்ற போதிலும் அது முற்றிலும் சாத்தியப்படவில்லை.




கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனின் காலத்தில் நிகழ்ந்த முக்கிய சம்பவமாக உபசம்பதா சடங்கு மீளவும் நடத்தப்பட்டதாகும். வீழ்ச்சி கண்டிருந்த உபசம்பதா சமயச் சடங்கை மீளக் கட்டியெழுப்புவதற்காக கண்டி மன்னர்கள் சிலரால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை வெற்றியளிக்கவில்லை. எனவே கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனால் ஒல்லாந்தரின் உதவியுடன் சீயம் (தாய்லாந்து) நாட்டிலிருந்து உபாலி மகா தேரரின் தலைமையில் ஐவர் வருவிக்கப்பட்டனர். 1753 ஆம் ஆண்டு மே மாதம் ஐந்து இளம் பிக்குகள் உபசம்பதாவைப் பெற்றனர். இதன் பின்னர் சீயப் பிக்குகள் பலமுறை இங்கு வந்ததாக குறிப்பிடப்படுகிறது. கீழ் நிலை அடைந்திருந்த பிக்குகளின் சங்கம் மீளவும் உயர் நிலை அடையப் பெற்றது சீயத் தொடர்புகளின் பின்னரேயாகும்.சீயம் மதப்பிரிவு சீய நாட்டு மன்னனதும், கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனதும் ஒன்றுபட்ட செயற்பாட்டாலேயே ஏற்படுத்தப்பட்டது.

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் இந்து மதத்தவனாயினும் பௌத்த மதத்திற்கு அரும்பணியாற்றினான். (உப சம்பதா சடங்கை நடாத்தியதோடு)

- தலதா பெரஹராவுடன் தேவாலய பெரஹராவையும் இணைத்து எசல பெரஹரவை முன்னேற்றினான்.
- பழைய இராசதானிகளில் சிதைவுற்றிருந்த விகாரைகளை திருத்தி அமைத்தான்
- வெலிவிற்ற சரணங்கர தேரர் என்ற பௌத்த பிக்குவின் சமய, கல்விப் பணிகளுக்கு ஆதரவு வழங்கினான்.
- விகாரைகளைக் கொண்டு நடாத்துவதற்கு நில புலன்களை அளித்தான்.

கி.பி 1759 ஆம் ஆண்டளவில் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தில் வாழ்ந்த சிங்களவர் பல துன்பங்களை அனுபவித்தனர்.இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திய கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் ஒல்லாந்தருக்கு எதிராகக் கலகம் செய்யுமாறு சிங்களவரைத் தூண்டினான். கி.பி 1760ஆம் ஆண்டு ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்பட்ட அநேக பிரதேசங்களில் கலகம் ஏற்பட்டது. இந்தக் கலகங்களின் விளைவாக பொருளாதார ரீதியில் பெரும் அழிவு ஏற்பட்டது. ஒல்லாந்தரை இலங்கையிலிருந்து அகற்ற கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் பிரித்தானியரின் உதவியைப் பெற்றுக் கொள்ள முயன்றான். ஜோன் பைபஸ் எனும் ஆங்கிலேயத் தூதுவன் வந்து பேச்சுவார்த்தைகள் நடாத்திய போதிலும் அது வெற்றி பெறவில்லை.



கி.பி 1765 ஜனவரியில் ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்தனர். ஒல்லாந்தர் கண்டியை அண்மித்த போது அரசனும்,குடும்பத்தினரும் கண்டியிலிருந்து தப்பிச் சென்றனர். ஒல்லாந்தர் கண்டியை சூறையாடிய போதிலும் கடும்மழை, தொற்றுநோய், உணவுத் தட்டுப்பாடு, பின்னர் கண்டிப்படையினர் ஒழிந்திருந்து தாக்கியமை ஆகிய காரணங்களால் ஒல்லாந்தப் படை பெரும் கஷ்டத்துக்குள்ளானது. இந்த ஆக்கிரமிப்புக் கண்டி இராச்சியத்திற்கும், ஒல்லாந்தருக்கும் பெரும் இழப்பை ஏற்படுத்தியதால் இரு பிரிவினரும் சமாதானத்தை விரும்பினர். அதன்படி கி.பி 1766 இல் இரு பிரிவினரும் உடன்படிக்கைக்கு உடன்பட்டனர். (இது தொடர்பாக மேலதிக தகவல்களை அலகு 4 இல் கற்போம்)

## மன்னன் இராஜாதி இராஜசிங்கன் (கி.பி 1782 ~ 1798)

கீர்த்தி ஸ்ரீஇராஜசிங்கனின் மரணத்தின் பின் அவனது சகோதரனான இராஜாதிஇராஜசிங்கன் அரசனானான். ஆங்கிலேயர் இலங்கையில் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றியது இம்மன்னனின் காலத்திலேயாகும். 1798ம் ஆண்டு இராஜாதி இராஜசிங்கன் மரணமானான்.

## மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் (கி.பி 1798 ~ 1815)

இராஜாதி இராஜசிங்கன் இறக்கும்போது பிரதானிகளின் அதிகாரம் அரசனின் அதிகாரத்தை விட மேலோங்கி இருந்தது. ஏற்றுக் கொள்ளப்பட்ட நாயக்க சம்பிரதாயத்தின் படி ஆட்சியுரிமையுடைய முத்துசாமியைப் புறக்கணித்து, நாயக்கர் வம்சத்தை சேர்ந்த கண்ணுசாமியை, அதிகாரம் பிலிமத்தலாவை அரசனாக்கிய சம்பவத்திலிருந்து பிரதானிகளின் கைமேலோங்கி இருந்தமை தெளிவாகிறது.

தன் எண்ணப்படி ஆட்சி செய்யும் அரசனாக அவனை வைத்திருப்பதே பிலிமத்தலாவையின் நோக்கமாகும். எனினும் நீண்ட நாட்கள் செல்லுமுன் அவர்கள் இருவரிடையேயும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. கி.பி 1803இல் ஆங்கிலேயருக்கும், கண்டி இராச்சியத்திற்கும் இடையே நடைபெற்ற போரில், தமக்கு சார்பாகப் பிலிமத்தலாவை செயற்படவில்லை என சந்தேகித்து பிலிமத்தலாவை உட்பட பிரதானிகளின் அதிகாரத்தை அரசன் குறைக்க முயன்றான்.

### ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன், பிரதானிகளின் அதிகாரத்தைக் குறைப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள்

1. தன்னை ஆட்சியில் அமர்த்தியவரைக் கூடப் புறக்கணித்து, நாயக்க வம்சத்தினரின் அறிவுரையின்படி ஆட்சி நடத்தினான்.
2. சிங்கள பிரதானிகள் வகித்த பதவிகளைத் தன் இனத்தவருக்கு வழங்கினான்.

3. மகா அதிகாரப் பதவிகளை வழங்கி சிங்கள பிரதானிகளிடையே பிளவுகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தான். பிலிமத்தலாவையின் பகைவனான மொல்லிகொடையை இரண்டாம் அதிகாரமாக நியமித்தமை இதற்கு எடுத்துக்காட்டாகும்.
4. இதுவரை இருந்த இரு அதிகாரிகளுக்குப் பதிலாக மூன்று அதிகாரிகளை நியமித்தான்
5. ஒரு பிரதானிக்குரிய நிர்வாகப் பிரதேசத்தை இரண்டாகப் பிரித்து எதிரிகளான இரு அதிகாரிகளை நியமித்தான்.

கண்டி இராச்சியத்தின் பிரதான சமூக பிரிவினரான பௌத்த பிக்குகளும், பிரதானிகளும், மக்களும் அரசனின் செய்கையினால் அவனில் வெறுப்புக் கொண்டு பகைவராகினார். அதற்கு அரசனின் பின்வரும் செயற்பாடுகள் காரணமாய் அமைந்தன.

1. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் தன்னைக் கொலை செய்வதற்குச் சூழ்ச்சி செய்ததாகக் குற்றஞ்சாட்டி மகா அதிகாரம் பிலிமத்தலாவையைச் சிரச்சேதம் செய்தான்.
2. எகலபொல மகா அதிகாரம் அரசனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து ஆங்கிலேயரிடம் சென்றதும், அவனது மனைவியையும், பிள்ளைகளையும் கொடூரமாகக் கொன்றான்.
3. இவைகள் பௌத்தர்களின் புனித பூமியில் நடைபெற்றதால், மக்களின் கடுமையான வெறுப்பை மன்னன் பெற்றுக் கொண்டான்.
4. அரசனுக்கு எதிராகச் செய்யப்பட்ட பிரதானிகளின் பிரிவுகளில் வாழ்ந்த மக்களைக் கொடுமைப் படுத்தினான்.
5. மொரதொட்ட இளம் பிக்கு அல்லது பரணாதல அநுநாயக்க தேரருக்கு அரச துரோக குற்றச்சாட்டின் பெயரில் மரண தண்டனை வழங்கினான்.

## ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றல்

கரையோரப்பகுதியில் தமது ஆட்சியை நிறுவிய ஆங்கிலேயருக்கு கண்டி இராச்சியம் சுயாதீனமாக இயங்குவது பெரும் சிக்கலாகவே இருந்தது. மகா அதிகாரமான பிலிமத்தலாவையின் உதவியுடன் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றும் பொருட்டு ஆளுநர் பிரட்ரிக் நோர்த் கண்டி மீது படையெடுத்தான். நவீன கருவிகளுடனும்,நிபுணத்துவத்துடனும், ஆங்கிலேயர் இருந்த போதிலும், கண்டி இராச்சியத்தில் போர்த்துக்கேயர் எதிர்நோக்கிய தோல்வியையே இவர்களும் எதிர்நோக்கினர்.


ஆளுனர் பிரட்ரிக் நோர்த்

கி.பி 1812இல் நியமனம் பெற்ற ரொபட் பிரௌன்றிக் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிட வேறு வழியைக் கையாண்டார். கண்டி இராச்சியத்தின் பிரதானிகளுக்கும், அரசனுக்கும் இடையில் நிலவிய கருத்து வேறுபாடுகளைப் பயன்படுத்திக் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றும் பொறுப்பு ஜோன் டொயிலி எனும் அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது. அவன் சிங்களம், பாளி, புத்தசமயம் என்பவற்றைக் கற்று,பௌத்த பிக்குகள் ஆகியோருடன் நெருங்கிப் பழகி கண்டி இராச்சிய அனைத்து மக்களும் அரசனில் காட்டும் வெறுப்பை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுத்தான். கி.பி 1812இல் ஆங்கிலேயரிடம் தப்பிச் சென்ற மகா அதிகாரம் ஆங்கிலேயருக்குப் பல உதவிகளை செய்தான். அதன்படி 1815இல் கண்டி இராச்சியத்தைத் தமக்குக்கீழ் கொண்டு வருவதில் ஆளுநர் வெற்றி கண்டார்.

மக்களின் எதிர்ப்பின்றி ஆங்கிலேயர் கண்டியை நோக்கிச் சென்றனர். அரசன் தம் இராணிகளுடன் கண்டியின் உட்பகுதிக்குத் தப்பிச் சென்று ‘‘மெதமஹ நுவர’’ எனுமிடத்தில் ஒளிந்திருந்தான். எனினும் பிரதானிகளின் உதவியால் அவர்கள் கைது செய்யப்பட்டு கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டனர். பின்னர் இந்தியாவில் வேலூர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர்.

ஆங்கிலேயருக்கும் கண்டிப்பிரதானிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படி கி.பி 1815 இல் கண்டி இராச்சியம் ஆங்கிலேயர் வசமாயிற்று.

**பயிற்சி**

1. போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிக்கொள்ள முடியாற்போனமைக்கான காரணிகள் 3 ஐக் கூறுக.
2. ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொள்ள உதவிய காரணிகள் மூன்றைக் எழுதுக.


**செயற்பாடு**

1 “ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்குப் பிரதானிகளின் செயற்பாடுகளே காரணமாயின”

2 ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் செயற்பாடுகளே காரணமாயின. இத்தலைப்புகளில் விவாதம் ஒன்று நடத்துக.

## கண்டி இராச்சியத்தின் நிர்வாக முறை

கண்டி இராச்சியத்தின் நிர்வாக அமைப்பைக் கீழ்வரும் அட்டவணையிலிருந்து எம்மால் விளங்கிக் கொள்ளக் கூடியதாயிருக்கும்.




## மன்னர்

※ கண்டி இராச்சியத்தின் ஆட்சி முறைக்கு அமைய நாட்டின் அனைத்துத் துறைகளினதும் அதிபதி மன்னனாவான். அவன் “இலங்கேஸ்வர”, “திரீ சிங்களாதீஸ்வர” போன்ற பெயர்களாலும் குறிப்பிடப்பட்டான்.

※ நாட்டின் அனைத்து நிலங்களும் மன்னனுக்குரியதாகக் கருதப்பட்டபடியால் பூபதி எனவும் அழைக்கப்பட்டான்.

※ மன்னன் அனைத்து அதிகாரங்களையும் உடையோனாயினும் அவன் பிக்குகளினதும், பிரதான அதிகாரிகளினதும் ஆலோசனைக்கு ஏற்ப செயற்பட வேண்டும்.

※ அக்கால மக்களிடையே பிரசித்தி பெற்றிருந்த பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள் என்பவற்றை மன்னன் பின்பற்றியாக வேண்டியிருந்தது. அவ்வாறின்றேல் மக்கள் அவனுக்கு விரோதமாக செயற்படுவர். அது அவனது பலத்திற்கும், பாதுகாப்பிற்கும் தீங்கானதாக அமையும். ஸ்ரீவிக்கிரம இராஜசிங்க மன்னன் ஆங்கிலேயரின் கைகளில் சிக்கியது, அவன் பிக்குகளினதும், உயரதிகாரிகளினதும் ஆலோசனைகளைப் புறக்கணித்து, மரபுகளைப் பேணாது நடந்தமையாலாகும்.

## அரச சபை

கண்டி இராச்சிய நிர்வாக முறையின் முக்கிய அலகாக அமைந்த அரச சபையில் கீழ்வரும் நிர்வாகிகள் அங்கம் பெற்றிருந்தனர்.

- மஹா அதிகாரங்கள் (பிரதம பிரதானிகள்)
- திஸாவைமார்
- ரட்டேமஹாத்மயாமார்
- வரித்துறை செயலாளர்கள்
- அரச மாளிகை செயலாளர்கள்
- தியவடனே நிலமே
- பஸ்நாயக்க நிலமே

சட்டம் இயற்றுதல், அவற்றை அமுல் செய்தல், நீதி வழங்குதல், வெளிநாட்டு விவகாரங்கள் என்பனவற்றின் போது அரசனுக்கு அரச சபை ஆலோசனைகளை வழங்குதல் என்பன அரச சபையின்பணிகளாகும்.

## மஹா அதிகாரங்கள் (பிரதம பிரதானிகள்)

கண்டி இராச்சிய நிர்வாக விடயங்களில் மன்னனுக்கு உதவி புரிவதற்காக பிரதம பிரதானிகள் இருவர் இருந்தனர். உடகம்பஹா (உயர் பிரதேசம்), பள்ளே கம்பஹா (தாழ் பிரதேசம்) அதிகாரங்கள் என அழைக்கப்பட்ட அவர்கள், அரசனின் பிரதான ஆலோசகர்களுமாவார்கள்.

இவ்விருவரும் தமது நிர்வாக விடயங்களில் கூடிய அதிகாரங்களைப் பெற்றிருந்தனர். அவையாவன:

- சமாதானத்தை நிலவச் செய்தல்
- அரசனுக்குத் தேவையான படைகளை பரிபாலித்தலும், நடாத்திச் செல்லலும்
- வரி வசூலித்தல்
- கீழ்நிலை உத்தியோகத்தர்களை நியமித்தல்
- விசாரணைகளை மேற்கொள்ளல்.

பிரதானிகளால் தீர்ப்பதற்கு அதிகாரம் அற்ற முக்கியமான வழக்குகள் அரசனின் **"பெருவழக்கு"** மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

## பிரதேச நிர்வாகம் (ரட்ட வஸம)

பிராந்திய நிர்வாக வசதிக்காக கண்டி இராச்சியம் 21 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் 12 திஸாவைகளும், 9 ரட்டைகளும் குறிப்பிடப்பட்டன. இப்பிரிவுகளும் அதன் நிர்வாகிகளும் பொதுவாக பிரதேச நிர்வாகிகள் எனக் குறிப்பிடப்பட்டனர். இவற்றுள் திஸாவைகளின் நிர்வாகிகளாக

திஸாவைமாரும் ரட்டையின் நிர்வாகிகளாக ரட்டே மஹாத்மாயாமாரும் கடமையாற்றினர். அவற்றுக்குக் கீழ்ப்பட்ட கோறளைகளை கோறளைமாரும் பற்றுகளை அத்துகோறளைமாரும், கிராம மக்களை கிராமத் தலைவர்களும் பரிபாலித்தனர்.

**பிரதேச நிர்வாகம்**

| **திஸாவைகள் - 12** | **ரட்டைகள் - 09** |
| --- | --- |
| திஸாவைமார் | ரட்டே மஹத்மயாமார் |
| ↓ | ↓ |
| கோறளை - கோறளைமார் | கோறளை - கோறளைமார் |
| ↓ | ↓ |
| பற்று - அத்துகோறளைமார் | பற்று - அத்துகோறளைமார் |
| ↓ | ↓ |
| கிராமம் - கிராமத் தலைவர்கள் | கிராமம் - கிராமத் தலைவர்கள் |

**செயற்பாடு**

திஸாவைகள் பன்னிரெண்டினதும் ரட்டைகள் ஒன்பதினதும் பெயர்களை தேடியறிந்து பட்டியற் படுத்துக.

இவ்வதிகாரிகள் தமது நிர்வாக பிரதேசங்களில்

- சிறந்த நிர்வாகத்தை நடத்திச் செல்லல்
- வழக்குகளையும், பிரச்சினைகளையும் தீர்த்தல்
- வரி வசூலித்தல்

ஆகிய நிர்வாகக் கடமைகளுக்குப் பொறுப்பாக இருந்தனர். தமக்கு நீதித் தீர்ப்புக்களை வழங்கும் அதிகாரம் இல்லாத வழக்குகளை விசாரித்தல், தமது மேல் உத்தியோகத்தர்களுக்குப் பாரப்படுத்தும் அதிகாரம் இருந்தது. ஒன்றுதிரட்டப்படும் வரி அரச பொதுப் பண்டகசாலைக்கு அனுப்பப்பட வேண்டும்.

## அரசமாளிகை செயலாளர்கள்

இவர்கள் நேரடியாக அரசருடன் சம்பந்தப்பட்டு இயங்கியோராவார். சம்பிரதாயங்கள், பழக்கவழங்கங்கள் என்பவற்றுக்கேற்ப அரச கௌரவம் பேணப்படும் வண்ணம் செயற்படும் அனைத்துப் பொறுப்புக்களும் இச்செயலாளரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர்களுள் அரசனின் திறைசேரிக்குப் பொறுப்பான பெரும் பண்டகசாலை செயலாளர்கள் முக்கியமானவராவார்.

இவர்களின் சில பொறுப்புக்கள் வருமாறு:

- அரசனுக்கேற்ற விசேட உணவு வகைகளையும், மாளிகையிலிருந்து உணவைப் பெற்ற பிக்குகளுக்கும் வெளிநாட்டு விருந்தினருக்கும் மாளிகையின் உத்தியோகத்தர்கள் பெருந்தொகையினருக்கும் உணவு, பானம் என்பவற்றை வழங்குதல்.
- மாளிகைக்கு விளக்கேற்றுதல்.
- அரசருக்கும் அவர் குடும்பத்தினருக்கும் நீராடும் ஏற்பாடுகளை செய்தல்.
- அவர்களுடைய ஆடைகளை சலவை செய்தல்.
- செய்திகளைக் கொண்டு செல்லல்.
- யானைகளைப் பரிபாலித்தல்.
- மாளிகையின் மேன்மையைப் பேணும் வண்ணம் அதன் அலங்காரங்களை மேற்கொள்ளல்.

இவ்வாறான பல பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக வெவ்வேறு கடமைப் பொறுப்புக்களுக்கென்று தனித்தனி செயலாளர்களும் அவர்களின் கீழ் சிறு அதிகாரிகளும் சிற்றூழியர்களும் நியமிக்கபட்டிருந்தனர்.

**அரசமாளிகை அதிகாரிகளும் அவர்களுக்குரிய பொறுப்புகளும்.**

| | | |
|---|---|---|
| ❋ மஹா மொஹட்டால | - | மாளிகையின் செயலாளர் |
| ❋ கஜநாயக்க நிலமே | - | யானைப் படைக்குப் பொறுப்பான செயலாளர். |
| ❋ அதபத்துவே லேக்கம் | - | அரசரின் தனிப்பட்ட பாதுகாப்புக்குப் பொறுப்பான செயலாளர். |
| ❋ வெடிக்கார லேக்கம் | - | அரசரின் துப்பாக்கிப் படைக்குப் பொறுப்பான செயலாளர். |
| ❋ மடுவே லேக்கம் | - | நகர் காவல் படைக்குப் பொறுப்பான செயலாளர் |
| ❋ பத் வடன லேக்கம் | - | அரச சமையலறைக்குப் பொறுப்பான செயலாளர் |

## வரி வசூலிக்கும் பகுதி

நாட்டில் வரி அறவிடும் பொறுப்பை வகிக்கும் அதிகாரிகள் இப்பகுதியைச் சேர்ந்தோராவர். அரசரின் திறைசேரிக்கு நாட்டின் எல்லாப் பகுதியிலிருந்தும் கிடைக்கும் வரிகளை வசூலித்து அவற்றைப் பதிவு செய்வது இவ்வதிகாரிகளின் பணியாகும். யானை பிடிப்போரிடம் அறவிடப்படுவது **''யானை வரி''** என்றும் சட்டி பானை வனைவோரிடம் அறவிடப்படுவது **''வனைதல் வரி''** என்றும், வண்டிகளிலிருந்து அறவிடப்படுவது **''வண்டிவரி''** என்றும் பல்வேறு வகையான வரிகளின் பெயராலேயே அவற்றை அறவிடும் பகுதிகளும் பெயரிடப்பட்டிருந்தன.

## விஹாரைச் சொத்துக்கள்

தலாதா மாளிகையை முக்கியமாகக் கொண்டு விகாரைகள், தேவாலயங்கள், அவற்றில் வாழ்ந்த பிக்குகள், வணக்கத்துக்குரிய பொருட்கள், சொத்துக்கள் இப்பிரிவின் பொறுப்பில் இருந்தன. அவற்றைப் பாதுகாத்தலும் தியவடனே நிலமேயினதும் பஸ்நாயக்க நிலமேயினதும் அதிகாரிகளிடம் பொறுப்பளிக்கப்பட்டிருந்தது. பிக்குமார்களைக் கவனித்துக் கொள்ளல், வணக்க வழிபாடுகளை மேற்கொள்ளல், வருடாந்தம் பெரஹராக்களை நடாத்தல், விஹாரைச் சொத்துக்களைப் பேணல் என்பன இப்பகுதியினரின் பொறுப்பாகும்.

## நீதித்துறை

கண்டி இராச்சியத்தின் நிர்வாக அமைப்பில் உச்ச நீதித்துறை அதிகாரம் மன்னனையே சாரும். எல்லா நிர்வாகப் பகுதியினருக்கும் அவரவர் பிரிவில் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் அதிகாரம் இருந்து வந்தது. என்றாலும் பிக்குமார், உயர் அதிகாரிகள், இராசதுரோகம், கலவரங்கள் போன்ற வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் மன்னனின் நீதிமன்றத்துக்கே இருந்தது. நாட்டின் உச்ச சபையாக ‘மஹா நடுவ’ பெரு வழக்கு மன்றம் விளங்கியது. அதன் நீதிபதிகளாக அரசன் முதற்கொண்டு மஹா அதிகாரங்களும் அரசனால் நியமிக்கப்படும் திஸாவைகளும் ரட்டே மஹாத்மயாக்களும் செயற்படுவர். மரண தண்டனை வழங்கும் அதிகாரம் இந்நீதிமன்றத்துக்கு மட்டுமே உரியதாயிருந்தது.

## கண்டி இராச்சியத்தின் பொருளாதார நடவடிக்கைகள்

- ❈ கண்டி இராச்சியத்தில் சுயதேவைப் பூர்த்தியடைந்த விவசாயப் பொருளாதாரமே நிலவியது.
- ❈ மழை நீரைக் கொண்டே வயல்களில் பயிர் செய்யப்பட்டன. இதற்காக மலைச்சரிவுகளில் படிமுறைப்படி வயல்கள் அமைக்கப்பட்டிருந்தன.
- ❈ வயல்களில் நெல் பயிரிடப்பட்டது சேனைப்பயிர் செய்கையும் பரவலாக இடம்பெற்று வந்தது. அவற்றில் கரை நெல், குரக்கன், சாமை, சோளம் போன்ற தானிய வகைகளும் கிழங்கு, மரக்கறி வகைகளும் பயிரிடப்பட்டன.
- ❈ வீட்டுத் தோட்டங்களில் பலா, ஈரப்பலா, தென்னை, பாக்கு, மிளகு, சாதிக்காய், கராம்பு என்பன பயிரிடப்பட்டிருந்தன.
- ❈ நெல்லுற்பத்தி போதியளவின்மையால் பலாக்காய், ஈரப்பலாக்காய், கிழங்கு போன்ற மேலதிக உணவுப் பொருட்களும் சேனைகளில் பயிரிடப்பட்டவைகளும் உணவாகக் கொள்ளப்பட்டதோடு, வியாபாரத்திற்காக வாசனைத்திரவியங்களும் பயிர் செய்யப்பட்டன.
- ❈ கண்டி இராச்சியத்திற்குச் சொந்தமான சத்கோறளை (ஏழுகோறளை) போன்ற பிரதேசங்களிலிருந்து பெறப்பட்ட கறுவாவை அரசர், வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு விற்று நாட்டின் திறைச்சேரிக்கான பணத்தைத் திரட்டிக் கொண்டார்.

- ❋ வெளிநாட்டு வர்த்தகம் அரசனின் தனிப்பட்ட உரிமையாகக் காணப்பட்டது.
- ❋ உள்நாட்டு வியாபாரம் பிரதானமாகப் பண்டப் பரிமாற்றத்தின் மூலமே இடம்பெற்றது. புடைவை,புகையிலை, சுண்ணாம்பு, உப்பு, கருவாடு என்பவற்றை எடுத்துக் கொண்டு வந்த முஸ்லிம் வியாபாரிகள் கிராமங்களுக்கு வந்து, அங்கு வசித்தோரிடம் மிளகு, சாதிக்காய், கராம்பு, ஏலம் போன்ற பொருட்களுக்குப் பரிமாற்றம் செய்து கொள்வது இவ்வர்த்தகத்தின் சிறப்புப் பண்பாகும்.
- ❋ இரும்பு, மரம், உலோகம், அரக்கு, களிமண் கைத்தொழில்கள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டதுடன் பாயிழைத்தலும் வளர்ச்சி கண்டிருந்தது.
- ❋ மிருக வளர்ப்பும் இடம்பெற்றது. உழவு வேலைகளுக்காக எருமை மாடுகளும், வண்டி இழுப்பதற்காக காளை மாடுகளும், பாலைப் பெறுவதற்காகப் பசு மாடுகளும் வளர்க்கப்பட்டன.

## நில உரிமையும், பயன்பாடும்

கண்டி இராச்சியத்தில் நிலம் அனைத்தும் ‘‘பூபதி’’ எனக் குறிப்பிடப்படும் அரசனுக்குச் சொந்தமானது என மரபு ரீதியான நம்பிக்கை நிலவி வந்தது. அவற்றை அரசன் தனது பல்வேறுபட்ட அதிகாரிகளுக்குப் பகிர்ந்தளித்ததன் மூலம் அவற்றை அவர்கள் அனுபவிக்க வழி செய்தான். இவ்வாறான நிலங்கள் வெவ்வேறு பெயர்களால் குறிப்பிடப்பட்டன.

- ❋ கபாடகம் : அரசமாளிகையின் பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிலம். இதில் குடியிருந்தவர்கள் அவற்றைப் பயிரிட்டு உரிய பங்கை அரசமாளிகைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- ❋ நிந்தகம் : பிரபுக்களால் ஆற்றப்பட்ட சேவைகளுக்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலம்.
- ❋ விஹாரகம், தேவாலகம் : விகாரைகளினதும் தேவாலயங்களினதும் செலவுக்காக ஒதுக்கப்பட்ட நிலம்.
- ❋ மானிய நிலங்கள் (பரவேணி) : கிராம மக்களால் பரம்பரை பரம்பரையாக அனுபவித்து வந்த நிலம்.

## கண்டி இராச்சிய சமூக அமைப்பு

- ❋ கண்டி இராச்சியத்தில் கிராம சமூக அமைப்பே காணப்பட்டது.
- ❋ குலத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பொன்று அங்கு நிலவியது. பொருளாதார நடவடிக்கைகள் பல்வேறு குலத்தினரும் அவரவருக்குரிய உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடும் வண்ணம் அமைந்திருந்தது. திருமண சம்பந்தங்கள், அந்தந்தக் குலத்தினருக்கிடையே இடம்பெற்றன.

- ❋ கிராமிய மக்களின் அனைத்துச் செயற்பாடுகளும் 'அத்தம்' முறையிலும் அந்நியோந்நிய உறவு முறையிலும் இடம்பெற்று வந்தன. கிராமத்திலுள்ள அனைவரும் ஏனையோரின் விடயங்களில் ஒத்துழைப்புடன் செயற்பட்டனர் என்பதை இதிலிருந்து விளங்கிக் கொள்ளக்கூடியதாயுள்ளது. இன்று போல கூலிக்கு வேலை பார்க்கும் வழக்கம் அன்று இருக்கவில்லை.
- ❋ குடும்பமே சமூகத்தின் அடிப்படை அலகாக அமைந்தது. தாய், தந்தை, பிள்ளைகள் எல்லோரும் ஒரே கிராமத்தில் வாழ்ந்தமையால் அவர்களிடையே நெருங்கிய பிணைப்புக் காணப்பட்டது. இதனால் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ளும் வண்ணம் அவர்களுடைய வாழ்க்கை முறைமை அமைந்திருந்தது.
- ❋ இச்சமூகத்தில் மக்கள் நற்குணங்களைக் கொண்டிருந்தமை வெளிப்படையாக அவதானிக்கத்தக்க அம்சமாகும். மூத்தோரை கனம் பண்ணுதல், தாய் தந்தையரை பரிபாலித்தல், பிள்ளைகளை நல்லொழுக்கம் உள்ளோராய் வளர்த்தல், மது, சூது போன்ற தீய பழக்கங்களிலிருந்து விலகியிருத்தல் போன்ற பண்புகளை மலை நாட்டு மக்கள் கொண்டிருந்தனர்.
- ❋ ஆதிகாலந் தொட்டே கிராமத்திற்கும், பன்சலைக்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. கிராமிய மக்களின் பிறப்பு இறப்பு விவகாரம், நோய்கள், குடும்பப்பிரச்சினைகள் போன்ற அனைத்து விடயங்களிலும் பிக்குமார் சம்பந்தப்பட்டனர். பன்சலைகளையும், குருமார்களையும் பேணிப் பாதுகாப்பது கிராமிய மக்களின் தலையாய பணியாகக் கருதப்பட்டது.

## ஆடையணிகள்

ஒருவருடைய பதவி, அந்தஸ்துக்கு ஏற்ப ஆடைகள் வேறுபட்டன. உயர் பதவி வகித்தோரின் சீருடைகள், தொப்பி, உடம்பைப் போர்த்தக்கூடிய அளவிலான கமிஸை, சட்டை, துப்பட்டி (இடுப்பைச் சுற்றி அணியும் புடவை) என்பவற்றுடன் கூடியதாயிருத்தது. சிறிய அதிகாரிகள் சட்டை அணியவில்லை. அதிகாரிகள் வைபவங்களின் போதும் அரசரின் சமூகத்திற்குச் செல்லும் போதும் உரிய சீருடைகளுடன் காணப்பட்டனர். உயர் குலத்தவர்கள் வெள்ளை அல்லது நீல நிற பருத்தியிலான சட்டை அணிந்து இடுப்பில் உடம்புடன் சேர்ந்திருக்கும் வண்ணம் வெள்ளைப் புடவையும் அதற்கு மேல் நிறப் புடவை ஒன்றையும் அணிந்து இடுப்பை சுற்றி பட்டி ஒன்றையும் கட்டியிருந்தனர். பெண்கள் வீடுகளில் இருக்கும் போது உடம்பின் மேற்பாகத்தை மூடிச் சட்டை அணிந்து, முழங்காலுக்குக் கீழ் தொங்குமாறு புடவைத் துண்டு ஒன்றை அணிவது வழக்கமாகும். வைபவங்களின் போது உயர்குல மகளிர் சட்டை, ஒசரி, நெற்றிப்பட்டம், மாலை, வளையல், சிலம்பு என்பவற்றை அணிந்திருப்பர். கண்டிக்காலத்துக்குரிய விகாரைகளில் உள்ள ஓவியங்களில் அக்கால ஆடையணிகளைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

## கலைகளும் தேசியத் தொழில்களும்

கண்டி இராச்சிய மன்னர்கள் கலைகளின் முன்னேற்றத்திற்காக எப்போதும் போல் அனுசரணையாளர்களாக நடந்தமையால் அவை நன்கு முன்னேற்றமடைந்தன. புத்தரின் வாழ்க்கை வரலாறு, ஜாதகக் கதைகள் என்பவற்றை வரைவது இக்காலத்தில் ஜனரஞ்சகமடைந்திருந்தது. மாறனை வெல்லுதல், போதனை புரிதல், வெஸ்ஸந்தா ஜாதகக் கதை என்பன ஓவியர்களைக் கவர்ந்த தலைப்புக்களாக இருந்தன.

- ❋ பகுதி பகுதியாகப் பிரித்து சித்திரம் வரைதல்.
- ❋ தாவரங்கள், பாறைகள், நிறக்கற்கள் என்பவற்றைப் பயன்படுத்தி பல்வேறுபட்ட நிறங்களைத் தயாரித்தல்.
- ❋ அன்னச்சோடி, அன்னாசிப்பூ,தாமரைப்பூ என்பவற்றைச் சித்திரங்களில் கூடுதலாகப் பயன்படுத்தல்.
- ❋ கண்டிக்கால ஓவியங்களில் இன்னும் எஞ்சியிருப்பது சிலவேயாகும். அவற்றுள் பெருவாரியானவற்றை தம்புள்ளை ரிதி, தெகல்தொருவ, மெதவல ஆகிய விஹாரைகளில் பார்வையிடலாம்.

கண்டிக் காலத்தில் வளர்ச்சியடைந்த கலைத்துறைகளில் செதுக்கலுக்கும் முக்கியமான இடமொன்றுண்டு. மரம், கல், யானைத்தந்தம், பித்தளை, களிமண், என்பவற்றைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட செதுக்கல்கள் இன்று வரை பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. மரச்செதுக்கலுக்கு மிகவும் புகழ்பெற்றிருப்பது எம்பெக்க தேவாலயமாகும். இவ்வாலயத்தின் மரத்தூண்களிலும், வளைகளிலும் பல்வேறு மலர் அலங்காரங்களும், மிருக உருவங்களும், மனித உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. யானைத்தந்தங்களில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் பலவும் உள்ளன. சீப்பு, வளையல், ஆபரணப்பெட்டி, கதவுகளில் பதிக்கப்பட்டுள்ள தந்த வேலைப்பாடுகள், கதவு நிலைகள் என்பன இவற்றுள் குறிப்பிடத்தக்கவையாகும். நுண்ணிய வேலைப்பாடுகள் அமைந்த தங்க, வெள்ளி, பித்தளை, வெண்கல, செம்பு உலோகங்களால் ஆக்கப்பட்ட விளக்குகள், கேத்தல்கள், தாம்பாளம் போன்ற உபகரணங்களும், ஆபரணங்களும் இக்கால செதுக்கல் கலை அடையப்பெற்றிருந்த உன்னத நிலையை எடுத்துக் காட்டுகின்றன.

அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் உற்பத்தி செய்து கொள்ளும் அளவிற்கு கைத்தொழில்கள் முன்னேற்றமடைந்திருந்தன. மண்வெட்டி, கலப்பை, அரிவாள், கோடாரி என்பவை பட்டறைகளில் உற்பத்தி செய்யப்பட்டன. சட்டி, பானைகள், ஆடை, அணிகலன்கள் என்பனவும் மலைநாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டன. சில கைத்தொழிலுக்கேற்ப பிரசித்தம் பெற்ற ஊர்கள் காணப்பட்டன. கொத்மலை இரும்புப் பொருட்களின் உற்பத்திக்கும், கிரிவவுல பித்தளை உற்பத்திக்கும், தும்பறை பாய் உற்பத்திக்கும் பிரசித்தி பெற்றிருந்தன.

## கல்வி, சமய முன்னேற்றம்

இலங்கையில் ஆதிகாலந் தொட்டே கல்வி, சமயப்பணிகள் முக்கியத்துவம் பெற்றிருந்ததற்கு அரசர்களின் ஆதரவே காரணமாயிருந்தது. கண்டி அரசர்களும் கல்வி, சமய முன்னேற்றத்துக்கு தமது ஆதரவை நல்கினர். அரசியல் பிரச்சினைகளில் நாடு சிக்குண்ட காலங்களில் சமயமும், கல்வியும் ஸ்தம்பிதமாயின. கல்வித் துறைக்கு தலைமை வகித்தவர்கள் புத்த குருமார்களே ஆவார். முதன் முறையாக கல்வி, சமயத் துறைகளில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தவர் முதலாம் விமலதர்மசூரிய மன்னராவார். கண்டி மாநகரில் இரண்டு மாடிக் கட்டடம் ஒன்றை நிர்மாணித்து அதில் புனித தந்தத்தைப் பிரதிஷ்டை செய்தார். மேலும் மியன்மாரிலிருந்து (பர்மா) பிக்குகளைத் தருவித்து உபசம்பதாவை மீளவும் இந்நாட்டில் நிகழ்த்துவதற்கும் வழிவகுத்தார். முதலாம் விமலதர்மசூரிய மன்னனின் பின்னர் பதவிக்கு வந்த மன்னர்கள் அக்கொள்கையைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்றனர்.

கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனின் காலத்தில் சமய மறுமலர்ச்சி செயற்பாடுகள் வெளிப்படையாகத் தெரிகின்றன. அரசனின் இப்பணிக்குப் பெருந் துணையாக அமைந்தவர் வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கரதேரோ ஆவார். சங்கராஜா பதவிக்கு உயர்த்தப்பட்ட அன்னார் ''பிண்டபாதிக அசரண சரண சரணங்கர மா ஹிமி'' எனப்பிரசித்தமடைந்தார். அவரின் தலைமையில் இடம்பெற்ற முக்கியமான நிகழ்வுகள் வருமாறு :

- சீய தேசத்திலிருந்து உபசம்பதாவைத் தருவித்தல்.
- மலைநாட்டிலும், தாழ்நாட்டிலும் பன்சலைகளை அமைத்து அங்கு பிக்குமாரைத் தங்கச் செய்தல்.
- விஹாரைகளை அலங்காரப்படுத்த சித்திரங்களை வரைவித்தல்.
- குருமார்களின் கல்விக்காக ஓலைகளை எழுதுவித்தல்.
- விஹாரைகளின் செலவுக்காக அரசரிடமிருந்து நிலபுலன்களைப் பெற்றுக் கொடுத்தல்.

சரணங்கர தேரர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட கல்வி, சமய மறுமலர்ச்சியால் மலைநாட்டிலும், கரை நாட்டிலும் உணர்வு பூர்வமான மாணவர் பரம்பரை ஒன்று உருவானது. இவர்களே அடுத்து வரும் காலத்தில் சமய, கல்வி மறுமலர்ச்சியை முன்னடத்திச் சென்றோராவர்.

பயிற்சி

'அ' பகுதியிலுள்ளவருக்குப் பொருந்தக்கூடிய விடயங்கள் 'ஆ' பகுதியிலுள்ளன. என்றாலும் இங்கு பொருத்தப்பாடற்ற முறையில் தரப்பட்டுள்ளது. அவற்றைச் சரியாகப் பொருத்துக.

| அ | ஆ |
|---|---|
| 1. இளவரசன் டிகிரி பண்டார - | இரண்டாம் இராஜசிங்க எனும் பெயரில் கண்டி இராச்சியத்தின் மன்னனானான். |
| 2. மஹா ஆஸ்தான குமாரன் - | மாயதுன்னையின் சகோதரன். |
| 3. ரைகம் பண்டார - | ஏழாம் புவனேகபாகுவின் பேரப்பிள்ளை |
| 4. பெரிய பண்டார - | முதலாம் ராஜசிங்ஹ எனும் பெயருடன் சீதாவாக்கைக்கு மன்னனானான். |
| 5. ஜோதிய இளவரசன் - | கண்டி இராச்சியத்துக்கு சீதாவாக்கை இராச்சியத்தால் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பால் போர்த்துக்கேயரிடம் தஞ்சமடைந்த மன்னன். |
| 6. அம்புலுகல குமாரன் - | கண்டி இராச்சியத்தை கோட்டை இராச்சியத்திலிருந்து விடுதலை அடையச் செய்தவன். |
| 7. கரலியத்த பண்டார - | கண்டி இராச்சியத்தை கோட்டை இராச்சியத்திலிருந்து விடுதலை செய்து கொள்ள கிளர்ச்சி புரிந்தவன். |
| 8. சேனா சம்மத விக்கிரமபாகு - | கோட்டை இராச்சியத்திற்கு எதிராக கண்டி இராச்சியத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்கியவன். |
| 9. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க - | புத்த சமயத்திற்கு பெருஞ்சேவை புரிந்த நாயக்க மன்னன் |
| 10. ஸ்ரீ வீர பராக்கிரமபாகு நரேந்திர சிங்க - | முதலாவது நாயக்க வம்ச மன்னன் |
| 11. ஸ்ரீ விஜய ராஜசிங்க - | கடைசிச் சிங்கள மன்னன் |
| 12. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க - | இலங்கையின் கடைசி மன்னன் |

**சாராம்சம்**

- ❋ கண்டி இராச்சியத்தின் பூகோள அமைப்பானது அந்த இராச்சியத்தின் தனித்துவத்தைப் பேண மிகவும் உதவியாக இருந்தது.

- ❋ கோட்டை அரசு நிலைத்திருந்த காலத்தில், கண்டி இராச்சியம் தனி அரசாக எழுச்சி பெற்றுப் பலம் வாய்ந்த அரசாக விளங்கியது. முதலாம் விமலதர்ம சூரிய மன்னனின் காலத்தில் சீதாவாக்கையையும் இணைத்துக் கொண்டமை பிரபல்யமடைந்ததது.

- ❋ மன்னன் இரண்டாம் இராஜசிங்கன் கண்டி இராச்சியத்தின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு மகத்தான பணியாற்றினான்.

- ❋ கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்த நாயக்க வம்ச அரசர்களுக்கும், கண்டிப் பிரதானிகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற ஆங்கிலேயருக்கு வாய்ப்பாக அமைந்தது.

- ❋ கண்டி இராச்சியத்தில் தனித்துவமான ஆட்சி முறையும், பொருளாதார சமூக அமைப்பும் நிலவியது.